கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்.

முன்னிலை:– திரு. T.V.மணி., B.A.,L.L.B.,

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.

ஸ்ரீவில்லிபுத்தூர்.

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 8 ஆம் நாள் திங்கள்கிழமை

IA.No.8/2025 in OS.No.62/2021

சுரேஷ்குமார் ... மனுதார்/பிரதிவாதி

–எதிர்–

குமரேசன் ...எதிர்மனுதார்/வாதி

இம்மனுவானது என் முன்பாக 24.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.J.சந்துரு அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பிரேம்ஆனந்த் அவர்கள் முன்னிலையாகியும் மனு உரை, எதிர்உரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிர்மனுதாரர் தரப்பு எழுத்துப்பூர்வமான வாதுரையை பரிசீலித்தும் இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

மனுதாரர் தாவா மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டப்பிரிவு 151 மற்றும் கட்டளை 8 விதி 9 படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனு சுருக்கம்**

எதிர்மனுதாரர்/வாதி மனுதாரருக்கு எதிராக புரோநோட்டு தொகையை வரவு பெற கோரி தாவா அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிர்வழக்குரையை இந்த மனுவின் ஒரு பாகமாக வாசித்து கொள்ள பிரார்த்திக்கப்படுகிறது. மனுதாரர், இந்த எதிர்மனுதாரர்/வாதியிடம் ஒரு போதும் எவ்வித தொகையும் கடனாக பெற்றது கிடையாது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்/வாதிக்கும் எழுத்து மூலமாக எவ்வித ஆவணமும் கிடையாது. இந்த எதிர்மனுதாரர்/வாதி மனுதாரருக்கு பழக்கம் கிடையாது. இந்த எதிர்மனுதாரர்/வாதியும் இராஜபாளையத்தை சேர்ந்த வெங்கடேஷ்வரராஜா என்பவரும் தொழில் ரீதியாக பழக்கமான நபர்கள் ஆவார்கள். மனுதாரருக்கும் வெங்கடேஷ்வர ராஜாவுக்கும் சொத்து விற்பது தொடர்பாக ஒரு பதிவு செய்யப்படாத உடன்படிக்கை இருந்தது. மேற்படி உடன்படிக்கையில் இந்த எதிர்மனுதாரர்/வாதி 1வது சாட்சியாக கையொப்பம்

செய்தார். அந்த சமயம் மட்டுமே மனுதாரர் இந்த எதிர்மனுதாரர்/வாதியை பார்த்துள்ளார். அதன்பின்னர் மனுதாரர் சமூகம் நீதிமன்றத்தில் வைத்து தான் இந்த எதிர்மனுதாரர்/வாதியை மீண்டும் பார்த்தேன். அதற்கு இடைப்பட்ட காலத்தில் மனுதாரர், எதிர்மனுதாரர்/வாதியை பார்த்ததும் கிடையாது பேசியதும் கிடையாது. மனுதாரர், இந்த எதிர்மனுதாரர்/வாதியிடம் ரூ.11,00,000/– லட்சம் கடன் பெற்றதாக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் இந்த வழக்கில் மனுதாரரது தரப்பு எதிர்வழக்குரையை தாக்கல் செய்த பின் இந்த எதிர்மனுதாரர்/வாதி தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டை இந்நீதிமன்றத்தில் 2023ம் வருடம் மெமோ தாக்கல் செய்து பார்வையிட்ட பின்னர் தான் தாவா வழக்கு புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்பது எனக்கு தெரியவந்தது. அதன்பின்னர் தாவா வழக்கு புரோநோட்டில் உள்ள கையெழுத்து மனுதாரருடையதல்ல என்றும் எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரரது கையெழுத்தும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது சம்பந்தமாக மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி இருந்தது. அந்த சமயம் மனுதாரரது பரம்பரை தொழிலை தொடர்ந்து செய்வதில் மனுதாரருக்கும், அவரது குடும்பத்தார்களுக்கும் தொடர்ந்து பிரச்சனை ஏற்பட்டு வெளியூருக்கு சென்று சில காலம் தங்கி இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் மனுதாரரது வழக்கறிஞரை சந்தித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய என்னால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. தாவா வழக்கில் மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்/வாதியையும், அவரது தரப்பு சாட்சியத்தையும் குறுக்கு விசாரணை செய்ய 27.10.2025ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ள விவரத்தை மனுதாரரது வழக்கறிஞர் மனுதாரருக்கு தெரிவித்தார். தாவா வழக்கில் மனுதாரரது தரப்பு குறுக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்னர் தாவா வழக்கின் புரோநோட்டிற்கும், புரோநோட்டில் உள்ள கையொப்பத்திற்கும் மனுதாரருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்பதையும் அவை எதிர்மனுதாரர்/வாதியால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்வாதத்தை எழுப்ப வேண்டியது மனுதாரருக்கு அவசியமாக உள்ளது. மேற்படி எதிர்வாதத்தை தாவா வழக்கில் மனுதாரரால் எழுப்பமுடியவில்லை என்றால் மனுதாரருக்கு பணரீதியாகவும், மனரீதியாகவும் ஈடு செய்ய இயலாத அளவிற்கு அநேக கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அதன் காரணத்தால் மேற்படி மனுதாரரது எதிர்வாதத்தை மனுதாரர் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையாக தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானதாக உள்ளது. எனவே தாவா இடைநிலை மனு தாக்கலாயிற்று.

3) **எதிர்மனுதார் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்**

மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள, கூடுதல் எதிர்வழக்குரையில், 2வது பாராவில், 8வது, 9வது, 10வது வரிகளில், "இந்த நிர் பிரதிவாதிக்கும், வெங்கடேஷ்ராஜாவுக்கும், சொத்து இருப்பது சம்மந்தமாக, தொடர்பாக, ஒரு பதிவு செய்யப்படாத உடன்படிக்கை இருந்தது" என்பதை பிரதிவாதி ஒப்புக்கொள்கிறார். மேற்படி பிரதிவாதி கூறும் உடன்படிக்கையில், வாதி சாட்சி சாட்சி கையொப்பம்

செய்துள்ளதாக கூறியிருப்பது, பொய்யாகும். அவ்வாறு எந்த சாட்சி கையெழுத்தும் வாதி செய்யப்படவில்லை. பிரதிவாதி கூறும் அந்த உடன்படிக்கை ஆவணம் என்ன? அதைப்பற்றி எதுவும் கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை, மொட்டையாக உடன்படிக்கை ஆவணம் எனக்கூறுவது, இந்த புரோநோட்டு வழக்கிற்கு சம்மந்தம் உள்ளதா? என்பதைக்குறித்து பிரதிவாதி கூறப்படவில்லை? வாதியை பிரதிவாதிக்கு தெரியாது என்று கூறுவது பொய்யாகும்? அதைப்போல் பிரதிவாதியை வாதி ஒரு முறைதான் பார்த்திருக்கிறார் என்று கூறுவது பொய்யாகும்? பிரதிவாதி மேற்படி வாதியை ஒரு முறை தான் பார்த்திருக்கிறார் என்று கூறுவது பொய்யாகும். மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில், 2 வது பக்கத்தில், 3 வது பாராவில், அசல் வழக்கின் புரோநோட்டில், பிரதிவாதியின் கையொப்பம் 2023 வது வருடத்தில் தான் தெரியவந்தது என்று கூறுவது உண்மையை ஒப்புக்கொண்டு, கடன் வாங்கியதை உறுதிப்படுத்தி பிரதிவாதி கூறியுள்ளார். காரணம் இந்த அசல் வழக்கு, 2021 ம் வருடத்தில், 23.04.2021 ம் தேதி அன்றே, அசல் புரோநோட்டு வழக்கு, பிரதிவாதி சுரேஷ்குமார் வாதியிடம் ரூ.11,00,000/– கடன் வாங்கியதாக, அசல் புரோநோட்டு வழக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாக்க செய்யப்பட்டுள்ளன. கடந்த 25.11.2021 ம் தேதியன்று, பிரதிவாதி சுரேஷ்குமார் தரப்பில் சமூகம் நீதிமன்றத்தில், எதிர்வழக்குரை **Defendant Side Written Statement** தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் வெறுமனே, வாங்கவில்லை என்று மறுப்பு தெரிவித்துக்கொண்டு, அசல் புரோநோட்டு வழக்கில் ஸ்டாம்பில் உள்ள கையொப்பம் குறித்து, எந்தவிதமான பதிலும், மறுப்பும், பிரதிவாதி தெரிவிக்காத பட்சத்தில், தற்போது கூடுதல் எதிர்வழக்குரை என்ற பெயரில், தற்போது கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் கழித்து, 2023 வது வருடத்தில் தான் கையொப்பம் போட்டுள்ளதை பார்த்தேன் என்றும், அதன்பின் தற்போதுதான் தெரியவந்தது எனறும் கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய பதிலாக இல்லை. பிரதிவாதி சுரேஷ்குமார் அசல் புரோநோட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதி கையொப்பம் தான் என்பது உண்மையாகும். அதற்கான சாட்சிகள் உள்ளன. அதற்கு ஆவணங்கள் உள்ளன. தற்போது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் போது, இதுபோன்ற விபரங்களை கூறி, வாதியின் நிரூபண வாக்குமூலத்தை, பார்த்து, படித்துவிட்டு, அதன்பின் இவ்வாறு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தது, ஏற்றுக்கொள்ளகூடியதாக இல்லை. மனுதாரர்/பிரதிவாதிக்கும், எதிர்மனுதாரர்/வாதிக்கும், எந்தவிதமான விரோதமோ, சண்டையோ, சச்சரவோ கிடையாது. அதே நேரத்தில், பிரதிவாதி சுரேஷ்குமாரும், மேற்படி வாதி குமரேசனும் நல்ல குடும்ப நண்பர்கள், ஆவார்கள். ஒருவருக்கொருவர் வீட்டிற்கு வந்து போவார்கள். குடும்ப நண்பர்களின் பேரில், வாதியின் பிள்ளைகளும், பிரதிவாதியின் பிள்ளைகளும், நல்ல பழக்கம் உள்ளவர்கள். இவற்றை மறுக்கவோ, இல்லை என்றோ பிரதிவாதி சுரேஷ்குமார் கூறமுடியாது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், கடந்த 5 ஆண்டுகளாக ஏன்? புரோநோட்டில் உள்ள பிரதிவாதி கையொப்பம் குறித்து, கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்பதற்கான காலதாமதத்தை குறித்து கூறப்படவில்லை. மனுதாரர்/பிரதிவாதி

தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில், கூடுதல் எதிர்வழக்குரை எதற்காக தாக்கல் செய்கிறோம் என்பதை பற்றியும் காரணங்கள் மனுவில் கூறப்படவில்லை. மனுதாரர்/பிரதிவாதி வெளியூர் சென்றுவிட்டதால், கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும் கூறுவது பொய்யாகும். பிரதிவாதி எந்த ஊருக்கு போனார்? எங்கு தங்கினார்? எந்த காலங்களில் வெளியூரில் இருந்தார்? என்ற விபரங்கள் எதுவும் இல்லாமல், மொட்டையாக, வெறுமனே கூறியிருப்பது பொய்யாகும். பிரதிவாதி என்ன வியாபாரம் செய்து வருகிறார்? என்பதை பற்றி எதிர்வழக்குரையிலேயோ, மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையிலேயோ எதுவும் கூறப்படவில்லை? பிரதிவாதி சுரேஷ்குமார் தாக்கல் எதிர்வழக்குரையில், நிலம் சம்மந்தமாக, சொத்து விற்பது, வாங்குவது, குறித்து உடன்படிக்கை உள்ளது எனக் கூறியுள்ளார். அந்த உடன்படிக்கைக்கும், பிரதிவாதிக்கும் என்ன சம்மந்தம் உள்ளது? என்பதை பற்றி பிரதிவாதி எதுவும் கூடுதல் எதிர்வழக்குரையில் கூறப்படவில்லை? அதனால் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள, கூடுதல் எதிர்வழக்குரையை, சமூகம் நீதிமன்றம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், **I.A.NO.8/2025** மனுவையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், வாதி தரப்பில், மிகவும் பணிவுடன் வேண்டிப் பிரார்த்திக்கப்படுகிறது.

4) இந்த மனுவில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதார் கோரிய பரிகாரத்தை அவருக்கு வழங்க வேண்டுமா?

5) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) தீர்வு

(6–i) இம்மனுவில் உள்ள எதிர்மனுதாரர்/வாதியானவர் இம்மனுவில் உள்ள மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா புரோநோட்டின் பேரில் அசல் தொகை மற்றும் வட்டி தொகை மற்றும் செலவுத் தொகையையும் கோரி தாக்கல் செய்யப்பட்டும், ஷை வழக்கில் மனுதாரர்/பிரதிவாதியானவர் ஆஜராகி தனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். வழக்கின் தீர்வுக்காக எழுவினாக்களும் வனையப்பட்டது. கடந்த 14.10.2025 அன்று எதிர்மனுதாரர்/வாதியானவரை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும் வா.சா.ஆ.1 ஆவணம் மட்டுமே குறியீடு செய்யப்பட்டது. கடந்த 24.10.2025 அன்று வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யப்படாமல் 25.10.2025 அன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 27.10.2025 அன்று கூடுதல் சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்ட பொழுது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வகுமுறை 9, விதி 7 மற்றும் பிரிவு 151ன் படியும், வகுமுறை 18, விதி 17ன் படியும் மனுக்கள் தாக்கல் செய்து அதில் ஒருதரப்பாக்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்யவும், வா.சா.1 யை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்து கொள்ள வேண்டி தாக்கல் செய்யப்பட்டிருந்து, அதன்படிக்கு இரண்டு மனுக்களும் அனுமதிக்கப்பட்டு அன்றையதினமே வா.சா.1ன் சாட்சியம் பிரமாண பத்திரிக்கையின் நகலையும்,

கூடுதல் சாட்சியத்தின் பிரமான பத்திரிக்கையின் நகலையும், மனுதாரர்/பிரதிவாதி வழக்கறிஞர் அவர்களுக்கு சார்பாகி 28.10.2025 ஆம் தேதிக்கு வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோர்களை குறுக்கு விசாரணை செய்து கொள்ளவும், அதன் தொடர்ச்சியாக, 04.11.2025 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் 04.11.2025 ஆம் தேதியில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்து கொள்ளப்பட்டு, அதில், வாதியிடம் ஒரு போதும் எவ்வித தொகையும் கடனாக பெற்றது கிடையாது என்றும் வாதிக்கும், பிரதிவாதிக்கும் எழுத்துமூலமாக எவ்வித ஆவணமும் கிடையாது என்றும் வாதியை தனக்கு பழக்கம் கிடையாது என்றும் வாதிக்கும், இராஜபாளையத்தை சேர்ந்த வெங்கடேஷ்வர ராஜா என்பவரும் தொழில் ரீதியான பழக்கம் என்றும் வாதிக்கும் ஷை வெங்கடேஷ்வர ராஜா என்பவருக்கும் சொத்து விற்பது தொடர்பாக ஏற்பட்ட உடன்படிக்கையில் வாதியானவர் சாட்சி கையொப்பம் செய்துள்ள வகையில் தனக்கும், வாதிக்கும் ஒரு முறை தான் பார்த்துள்ளதில் தெரியும் என்றும், வாதியானவர் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு புரோநோட்டை 2023 ஆம் ஆண்டு மெமோ மூலம் பார்வையிட்டதில் தாவா வழக்கு புரோநோட்டில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்று தனக்கு தெரியவந்தது என்றும் தன்னுடைய கையெழுத்தை வாதியால் மோசடியாக உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும் இது தொடர்பாக கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்து இருப்பதாகவும் மனுதாரர்/பிரதிவாதியால் எடுத்துரைக்கப்படுகின்றது.

ஷை மனுவிற்கு எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டும், அதில், ஷை பிரதிவாதிக்கும், வெங்கடேஷ்வர ராஜா என்பவருக்கும் தொழில்ரீதியாக பழக்க, வழக்கம் மற்றும் சொத்து விற்பனை தொடர்பாக பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்டுள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஆனால் அந்த ஒப்பந்த பத்திரத்தில் வாதியானவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்று மனுதாரர்/பிரதிவாதி கூறுவது மறுக்கப்படுகின்றதும் ஷை கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கும் இந்த வழக்கு தாவா புரோநோட்டுக்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்பதை பொறுத்து கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லிக் கொள்ளவில்லை என்பதையும் காண முடிகின்றது. மேலும் ஷை வெங்கடேஷ்வர ராஜா என்பவருக்கும் எதிர்வாதிக்கும் இடையில் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அதில் வாதியும், சாட்சி கையொப்பம் செய்திருந்தால் ஷை கிரைய ஒப்பந்த ஆவணத்தை கூடுதல் எதிர்வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்திருக்க வேண்டும் அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் அந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் வாதியானவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளாரா? என்பதை காண முடியும். ஆனால் மனுதாரர்/எதிர்வாதியானவர் அப்படியொரு நடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதிலிருந்து மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கூடுதல்

எதிர்வழக்குரையாக சொல்ல முற்படுவதும் ஏற்புடையதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் 2021 ஆம் ஆண்டு தாவா புரோநோட்டு ஏற்பட்டுள்ளதாக சொல்லி 2021 ஆம் ஆண்டு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள பொழுது 25.11.2021 ஆம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதியானவர் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். அதில் பெயரளவில் தான் பிரதிவாதி தரப்பில் கடன் வாங்கவில்லை என்று மறுப்பு தெரிவித்துள்ளார். தைஷ புரோநோட்டில் ரெவின்யூ ஸ்டாம்பின் மீதுள்ள கையொப்பம் குறித்தோ எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றும் காண முடிகின்றது. தற்பொழுது சுமார் 5 ஆண்டுகள் கழித்து தான் கையொப்பமிட்டுள்ளதை 2023 ஆம் ஆண்டு தான் பார்த்ததாக சொல்லுவது ஏற்புடையதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் முந்தைய பாராவில், சொல்லிய பிரகாரம் 2021 ஆம் ஆண்டு அசல் வழக்கை தாக்கல் செய்து கொள்ளப்பட்டு 2021 ஆம் ஆண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டும், வழக்கு விசாரணைக்கு வந்த சமயத்தில், வாதியை விசாரிக்கப்பட்டும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பிற்கு குறுக்கு விசாரணை செய்து கொள்ள போதிய வாய்ப்பு வழங்கபட்டும் குறுக்கு விசாரணை செய்து கொள்ள முன்வராமலும், ஒருதரப்பாக்கப்பட்ட நிலையிலிருந்து கொண்டு அதன்படிக்கு மனுக்களை தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு ஒரு தரப்பாக்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்யப்பட்ட பின்பும் வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்து கொள்ள முன்வராமல் ஏறத்தாழ 5 ஆண்டு காலம் கழித்து தற்பொழுது கூடுதல் எதிர்வழக்குரையினை தாக்கல் செய்து கொள்வதாக கூறுவதும் அதில் சொல்லியவைகளும் இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாதது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே கூடுதல் எதிர்வழக்குரையை காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டதற்கும் மனுவில் சொல்லிய காரணமும் ஏற்புடையதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே 2021 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கினை 2026 ஆம் ஆண்டு ஆகியும், 5 ஆண்டுகள் கடந்தும் வழக்கு விசாரணைக்கு வராமலும் முடிவுக்கு கொண்டு வரவிடாமலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்க கூடியதாக இல்லை என்றும் தள்ளுபடி செய்யப்பட கூடியதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனுவை தள்ளுபடி செய்தும், எதிர்மனுதாரருக்குரிய செலவுத் தொகையினை மனுதாரரே செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 8ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI Digitally signed by T V MANI Date: 2026.06.08 17:34:48 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதார் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

T V MANI Digitally signed by T V MANI Date: 2026.06.08 17:34:54 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்.

ஸ்ரீவில்லிபுத்தூர்.

IA.No.8/2025 in OS.No.62/2021

உத்தரவு நாள் – 08.06.2026

IA.No.8/2025 in OS.No.62/2021, Order Dated: 08.06.2026

Order is pronounced.

Additional District Judge,

Srivilliputhur.